தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆடி 17, திருவள்ளுவர் ஆண்டு–2047

2016 ஆகஸ்ட் 1, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

கிடைத்த உணவைப் பலருக்கும் கொடுத்து, தானும் உண்டு, அனைத்து உயிர்களையும் காப்பாற்றுதல் நீதிநூல்கள் கூறுகின்ற அறங்கள் அனைத்திலும் மிக உயர்ந்ததாகும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. தகவல் கோரல்

(அ) வினாக்கள்–விடைகள் நேரத்திற்கான வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எதிர்க்கட்சியில் யார் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் என்று ஒதுக்கப்படக்கூடிய நேரத்தை, இதுவரையில், இந்தக் கூட்டத் தொடர் தொடங்கியதிலிருந்து இன்னும் அதற்காக ஒதுக்கப்படவில்லை என்ற செய்தியை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய எங்களைப் போன்றவர்கள் மட்டுமல்லாமல், ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களும் ஏராளமான கேள்விகளை வழங்கியிருக்கிறார்கள். எனவே, அதற்கென்று நேரத்தை ஒதுக்கித் தருவது முறையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.*

[2016 ஆகஸ்ட் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது இருப்பவர்களெல்லாம் புதிய உறுப்பினர்கள். நிறைய உறுப்பினர்கள் தாமதமாகத்தான் கேள்விகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு பதிலுக்காக அனுப்பியிருக்கிறோம். பதில் வந்தவுடன், கேள்விகளை நாம் எடுத்துக்கொள்ளலாம். ஏற்கெனவே, 25 நாட்கள்கூட கேள்வி நேரம் இல்லாமல் இந்த அவை நடந்திருக்கிறது. ஆகவே, அதுமாதிரியில்லாமல் கேள்விகளுக்குண்டான பதில் வந்தவுடனேயே, விரைவில், நான் கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) கேள்விகளுக்கு பதில் வரவில்லை.

(ஆ) கெயில் நிறுவனத்தின் எரிவாயுக் குழாய் பதிக்கும் திட்டத்தால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெயில் பிரச்சினை குறித்து கொடுத்த கவன ஈர்ப்பை நான் ஏற்கெனவே நினைவுபடுத்தியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட பதிலளிக்கத் தயாராக இருப்பதாக தாங்கள் சொன்னீர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், பதில் இருக்கிறதா? (குறுக்கீடு) பதில் சொல்கிறீர்களா? சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய GAIL–Gas Authority of India Limited நிறுவனத்தால், கேரள மாநிலத்தில் இருக்கக்கூடிய கொச்சின் திரவ எரிவாயு முனையத்திலிருந்து பெங்களூரு வரை எரிவாயுவைக் குழாய்மூலம் கொண்டு செல்லக்கூடிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகளினுடைய நலனுக்கு எதிராக அந்தத் திட்டம் அமைந்திருக்கிறது. குறிப்பாக, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி இந்த ஏழு மாவட்டங்கள் மட்டுமல்லாமல், திருவாரூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய மன்னார்குடியிலும் குறிப்பிட்ட சில பகுதிகள் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு, 310 கிலோ மீட்டர் நீளத்திற்கு, 20 மீட்டர் அகலத்திலே குழாய்கள் பதிக்கக்கூடிய இந்தத் திட்டத்தால், விவசாயிகளுடைய நலன்கள் மிகவும் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, அரசு